vikatan.com

NAANAYAM VIKATAN Volume: 21 Issue: 2

₹35

# நாணயம் விகடன்

பணத்தைப் பெருக்கும் தாரக மந்திரம்

7.12.25

**வீட்டுமனையில் சூப்பர் லாபம் பெற... 10 பிராக்டிக்கல் டிப்ஸ்!**

## முதலில் ரூ.25 லட்சம்... அடுத்தது கோடிகள்... சுலபமாகச் சேர்க்க சூப்பர் பிளான்!







ஆனந்த் பார்த்தசாரதி,
மேலாண் பங்குதாரர்,
www.arammfinserv.com



தற்போது
விற்பனையில்...

அண்மைக் காலத்தில் பங்குச் சந்தை சார்ந்த ஈக்விட்டி மியூச்சுவல் ஃபண்ட் திட்டங்களில் ஃப்ளெக்ஸிகேப் ஃபண்டுகள்தான் அதிகளவில் முதலீட்டாளர்களை ஈர்த்துள்ளன. ஃப்ளெக்ஸிகேப் ஃபண்ட் திட்டங்களுக்கு முதலீட்டாளர்களிடமிருந்து வந்த முதலீடுகள் அக்டோபர் மாதத்தில் 27% அதிகரித்து, 8,928 கோடி ரூபாயாக உள்ளது. பட்டியலிடப்பட்ட நிறுவனப் பங்குகளில் குறைந்தபட்சம் 65 சதவிகித தொகையை முதலீடு செய்வது ஃப்ளெக்ஸிகேப் ஃபண்ட் ஆகும்.

## முதலீட்டாளர்களின் பெஸ்ட் சாய்ஸ் ஃப்ளெக்ஸிகேப் ஃபண்ட்... லாபத்தை அள்ளித் தருமா?

(இந்த வார நாணயம் விகடனில்...)



# முதலீட்டாளர்களின் பெஸ்ட் சாய்ஸ் ஃப்ளெக்ஸிகேப் ஃபண்ட்... லாபத்தை அள்ளித் தருமா?

நடப்பு 2025-ம் ஆண்டின் அக்டோபர் மாதத்தில் மியூச்சுவல் ஃபண்ட் முதலீடுகள் பற்றிய தரவுகளை இந்திய மியூச்சுவல் ஃபண்ட் கூட்டமைப்பான ஆம்ஃபி வெளியிட்டுள்ளது.

அண்மைக் காலத்தில் பங்குச் சந்தை சார்ந்த ஈக்விட்டி மியூச்சுவல் ஃபண்ட் திட்டங்களில் ஃப்ளெக்ஸிகேப் ஃபண்டுகள்தான் அதிகளவில் முதலீட்டாளர்களை ஈர்த்துள்ளன.

**ஆனந்த் பார்த்தசாரதி,**
மேலாண் பங்குதாரர்,
www.arammfinserv.com




**டாப் 5 ஃப்ளெக்ஸிகேப் ஃபண்டுகள்..!***

| ஃபண்ட் பெயர் | வருமானம் % (2025 நவ. 19, 10 ஆண்டு நிலவரப்படி) | | |
|---|---|---|---|
| | 3 ஆண்டு | 5 ஆண்டு | 10 ஆண்டு |
| குவான்ட் ஃப்ளெக்ஸிகேப் ஃபண்ட் | 18.04 | 27.45 | 20.31 |
| பராக் பரிக் ஃப்ளெக்ஸிகேப் ஃபண்ட் | 21.78 | 22.22 | 18.49 |
| ஜே.எம் ஃப்ளெக்ஸிகேப் ஃபண்ட் | 22.72 | 24.31 | 18.39 |
| 360 ஒன் ஃபோகஸ்டு ஃபண்ட் | 16.87 | 19.58 | 17.62 |
| ஹெச்.டி.எஃப்.சி ஃப்ளெக்ஸிகேப் ஃபண்ட் | 22.61 | 27.36 | 17.48 |

* பரிந்துரை அல்ல. கடந்த கால வருமானம் எதிர்காலத்தில் நிச்சயமில்லை.

ஃப்ளெக்ஸிகேப் ஃபண்ட் திட்டங்களுக்கு முதலீட்டாளர்களிடமிருந்து வந்த முதலீடுகள் அக்டோபர் மாதத்தில் 27% அதிகரித்து, 8,928 கோடி ரூபாயாக உள்ளது. பட்டியலிடப்பட்ட நிறுவனப் பங்குகளில் குறைந்தபட்சம் 65 சதவிகித தொகையை முதலீடு செய்வது ஃப்ளெக்ஸிகேப் ஃபண்ட் ஆகும். இந்த வகை ஃபண்டின் சிறப்பு அம்சமாக, லார்ஜ்கேப் பங்கு, மிட்கேப் பங்கு, ஸ்மால்கேப் பங்குகளில் எதில் வேண்டுமானாலும் எவ்வளவு வேண்டுமானாலும் அந்த ஃபண்டின் ஃபண்ட் மேனேஜர் முதலீடு செய்யலாம்.

இதனால், நீண்ட காலத்தில் பரவலாக ரிஸ்க் குறைகிறது, பங்குச் சந்தையின் ஏற்ற, இறக்கத்தைச் சமாளிக்க முடிகிறது. அதே நேரத்தில், லார்ஜ்கேப் ஃபண்டுடன் ஒப்பிடும் போது ரிஸ்க் அதிகமாக உள்ளது. என்றாலும், லார்ஜ்கேப். ஃபண்டுகளை விட அதிக வருமானம் கொடுக்க வல்லவையாக உள்ளன. ஃபிளெக்ஸிகேப் ஃபண்ட், ஓப்பன் எண்டட் ஃபண்ட் பிரிவைச் சேர்ந்ததால் எப்போது வேண்டுமானாலும் முதலீடு செய்யலாம்; எப்போது வேண்டுமானாலும் விற்றுப் பணமாக்கலாம்.

இந்த ஃபண்டில் முதலீட்டாளர்களிடமிருந்து திரட்டப்படும் பணத்தில் 65%-க்கு மேல் இந்தியப் பங்குகளில் முதலீடு செய்யப்படுவதால், ஈக்விட்டி ஃபண்டுகளுக்கு உரிய வரிச் சலுகை அளிக்கப்படுகிறது. இந்த ஃபண்டின் யூனிட்டுகளை ஓராண்டுக்குள் விற்றுப் பணமாக்கினால் குறுகிய கால மூலதன ஆதாய வரியாக லாபத்துக்கு 20% வரி கட்ட வேண்டும். இதுவே, ஓராண்டுக்கு மேல் யூனிட்டுகளை விற்றுப் பணமாக்கினால், நிதியாண்டில் நீண்ட கால மூலதன ஆதாயத்துக்கு ரூ.1.25 லட்சம் வரைக்கும் வருமான வரி இல்லை. அதற்கு மேற்பட்ட லாபத்துக்கு ஒருவர் எந்த வரி வரம்பில் வந்தாலும், 12.5% வரி கட்டினால் போதும்.

2025 நவம்பர் 19-ம் தேதி நிலவரப்படி, கடந்த மூன்று ஆண்டுகளில் டாப் 5 ஃபண்டுகளின் வருமானம் 24%-27% ஆக உள்ளது. இதுவே, கடந்த 5 மற்றும் 10 ஆண்டுக் காலத்தில் முறையே 26%-28.5% மற்றும் 17.5%-20% ஆக உள்ளது. 10 ஆண்டுகள் அடிப்படையில் டாப் 5 ஃபண்டுகளின் வருமான விவரத்தை அட்டவணையில் பார்த்துத் தெரிந்துகொள்ளவும்.

இந்த ஃபண்டில் முதலீட்டாளர்களிடமிருந்து திரட்டப்படும் பணம், அனைத்துப் பங்குச் சந்தை மதிப்புகொண்ட லார்ஜ்கேப் பங்குகள், மிட்கேப் பங்குகள், ஸ்மால்கேப் பங்குகளில் கலந்து முதலீடு செய்வதால் இது அனைத்துத் தரப்பினருக்கும் ஏற்றதாக உள்ளது. மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிலையில் பணவீக்க விகிதத்தைவிட இரு மடங்கு வருமானம், அதாவது, ஆண்டுக்கு 12%-13% வருமானம் எதிர்பார்க்கும் அனைவரும் இந்த ஃபண்டில் முதலீடு செய்யலாம். ●